



# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969



புதன், நவம்பர் 10.2021

மலர்:11 இதழ்:16


# தமிழ்நாட்டிற்கு ரெட் அலர்ட்... வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

# மழை முடியும் வரை அம்மா உணவகத்தில் இலவச உணவு

## மழை வெள்ளத்தால் பாதிப்பு: மக்களை நேரடியாக சந்தித்து நிவாரணப் பொருட்களை வழங்கிய முதல்வர்!





சென்னையில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடந்த 3 நாட்களாக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அந்த வகையில் இன்று தனது சொந்த தொகுதியான கொளத்தூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த முதலமைச்சர், பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். தொடர்ந்து மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக உணவு தயார் செய்யப்படும் இடத்தில் முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது உணவு தரமாக இருக்கிறதா என சாப்பிட்டு பார்த்தார். மேலும், சென்னை போரூரில் உள்ள அம்மா உணவகத்தில் உணவை சாப்பிட்டுப் பார்த்து தரத்தை ஆய்வு செய்தார். இதனிடையே ஆழ்வார்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், அதிமுக ஆட்சிகாலத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கொள்ளையடித்துள்ளனர். மழைநீர் வடிகால் பணிகளில் சொல்ல முடியாத அளவிற்கு கொள்ளையடித்துள்ளனர். பொய் சொல்வதற்கென்றே பிறந்தவர் எடப்பாடி பழனிசாமி× என்று குற்றம்சாட்டினார். மழை முடியும் வரை அம்மா உணவகத்தில் இலவச உணவு வழங்க உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த முதலமைச்சர், மாநகராட்சி சார்பாகவும் உணவு சமைத்து வழங்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.சென்னையில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் சாலைகளில் வெள்ளம் சூழ்ந்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வரும் நாட்களிலும் கன மழை நீடிக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தென்மண்டல வானிலை ஆய்வு மைய தலைவர் பாலச்சந்திரன், தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார். புயலாக மாறுமா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. என்றும் கூறினார்.

## எந்தெந்த மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை?



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த சில தினங்களாக சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. இந்த நிலையில், டெல்டா மாவட்டங்களில் அதி கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் சென்னையில் 3 நாட்களுக்கு கனழை தொடரும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய தென் மண்டல இயக்குநர் பாலச்சந்திரன் பேட்டி அளிக்கையில் கூறியதாவது:— தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது . இது அடுத்த 36 மணி நேரத்தில்காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து 11 ஆம் தேதி காலை தமிழகக் கரையைக் நெருங்கக் கூடும்.இதன் காரணமாக இன்று டெல்டா மாவட்டங்கள் புதுக்கோட்டை ராமநாதபுரம் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் அதி கன மழை பெய்யக்கூடும். தூத்துக்குடி, நெல்லை கடலூர், மதுரை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கனமழையும் சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு அரியலூர், பெரம்பலூர் திருச்சி விழுப்புரம் விருதுநகர் மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கன மழையும், ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும். சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 3 நாட்களுக்கு மழை தொடரும் 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும் நகரின் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு நகரின் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கன மழை பெய்யக்கூடும் அதிகபட்ச வெப்பநிலை 26 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும் என்று தெரிவித்துள்ளார். மேலும், சென்னை வானிலை ஆய்வு மையம் கூறுகையில் நாளை மறுதினம் வட கடலோர மாவட்டங்கள் மற்றும் சேலம், நீலகிரி, கோவை, நாமக்கல், ஈரோடு மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழையும், ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். 13 ந்தேதி(சனிக்கிழமை) நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கனமழையும், ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்பு இருக்கிறது. தெற்கு ஆந்திரா மற்றும் தமிழக கடற்கரை பகுதிகள் மர்றும் அதனை ஒட்டிய இலங்கை கடற்கரை பகுதிகள், குமரிக்கடல் பகுதிகள் மற்றும் தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை வரை மணிக்கு 40 முதல் 70 கி.மீ.வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இந்த பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகின்றனர்.வடகிழக்கு பருவமழை காலமான கடந்த அக்டோபர் 1 ந்தேதி முதல் இன்று வரையில் பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 24 செ.மீ ஆகும் ஆனால் தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக இயல்பை விட 46 சதவீதம் அதிகரித்து, 36 செ. மீ. என்ற அளவில் பதிவாகி இருக்கிறது. இதில் கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர் மாவட்டங்களை தவிர மற்ற இடங்களில் இயல்பை விட மழை அதிகம் பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# தூர்வாரும் பணிகளை செய்யாத காரணத்தால் சென்னை பாதிப்பு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு




வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே தேவையான தூர்வாரும் பணிகளை செய்யாத காரணத்தால் மழை வெள்ளத்தில் சென்னை பாதிக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டி உள்ளார். யானைகவுனி, திருவொற்றியூர், ஆர். கே. நகர், மூலக்கடை உள்ளிட்ட பகுதிகளில் மழை வெள்ள பாதிப்பை அவர் ஆய்வு செய்தார். அதன் பின்னர் கொளத்தூரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மதிய உணவு மற்றும் நிவாரண பொருட்களை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மூன்று நாட்களாகியும் இன்னும் பல பகுதிகளில் தண்ணீர் வடியாமல் இருப்பதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாக கூறினார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துவருகிறது. அதனால் கடந்த நான்கு தினங்களாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து மழை பெய்துவருகிறது. சென்னையில் பல இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. முதல்வர், அமைச்சர்கள் ஆகியோர் பாதிப்புக்குள்ளான பகுதிகளை நேரில் சென்று ஆய்வு செய்துவருகிறார்கள். அதேபோல், சென்னை வால்டாக்ஸ் சாலையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பார்வையிட்டு அப்பகுதி மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

# வெள்ளத்திற்கு காரணம் திமுக ஆட்சியில் கட்டப்பட்ட பாலங்கள்தான்: சசிகலா





சென்னையில் கடந்த சில நாட்களில் பெய்த கன மழை காரணமாக பல இடங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. வெள்ளம் பாதித்த பகுதிகளை அமைச்சர்களும் அதிகாரிகளும் பார்வையிட்டு நிவாரண மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட இடங்களை ஆய்வு செய்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, திமுக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததே சென்னையின் தற்போதைய நிலைக்கு காரணம் என்று குற்றம்சாட்டியிருந்தார். இந்த நிலையில் சென்னை வெள்ளம் தொடர்பாக அதிமுக பொதுச்செயலாளர் என்ற பெயரில் சசிகலா அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், ஆட்சியாளர்கள் வெள்ள பாதிப்பு பகுதிகளை பார்வையிட செல்வதால், அதிகாரிகளால் பாதிப்புகளை சரிசெய்வதில் கவனம் செலுத்த முடிவதில்லை. ஆட்சியாளர்களுக்கு வரைபடம் காட்டி, விளக்கம் அளிப்பதிலேயே அதிகாரிகள் நேரத்தை செலவிடுகின்றனர் என குற்றம்சாட்டியுள்ளார். பாதிக்கப்பட்டுள்ள மக்களுடன், மீட்புப்பணியில் ஈடுபடுவோருக்கும் உரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற அவர், பாதிக்கப்பட்டுள்ள விளைநிலங்கள், விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அதிமுக தொண்டர்களும், உணவு, குடிநீர், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிட வேண்டும் எனவும் சசிகலா கோரிக்கை விடுத்துள்ளார். சென்னையின் வெள்ள பாதிப்புகளுக்கு மிக முக்கிய காரணம் திமுக ஆட்சிக்காலங்களில் எவ்வித வடிகால் வசதியும் இன்றி தொலைநோக்கு பார்வையில்லாமல் நகரத்தின் முக்கிய சாலைகளில் கட்டப்பட்ட பாலங்கள் தான் என்று மக்கள் கருதுவதாகவும் சசிகலா குற்றம்சாட்டியுள்ளார்.

# அத்தியாவசியமின்றி மக்கள் வெளியே செல்ல வேண்டாம் தமிழ்நாடு ஆளுநர் அறிவுறுத்தல்



வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையொட்டி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, தஞ்சை, மயிலாடுதுறை, திருவாரூர், நாகை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக, அடுத்த இரண்டு நாட்களுக்கு சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் அதீத கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை தமிழ்நாடு அரசு முடுக்கிவிட்டுள்ளது. இந்த நிலையில், "மழை பாதிப்புள்ள பகுதிகளில் அத்தியாவசியமின்றி மக்கள் வெளியே செல்ல வேண்டாம். அத்தியாவசியமின்றி வெளியே செல்லாமல் இருப்பதன் மூலம் விரும்பத்தகாத நிகழ்வுகளைத் தவிர்க்கலாம் . இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தின் கனமழை முன்னறிவிப்பைக் கருதி மக்கள் விழிப்புடனும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்" என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். தமிழ்நாடு ஆளுநர் மாளிகையின் அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவியின் அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# பாதிப்புக்குள்ளான பகுதிகளைப் படகில் சென்று பார்வையிட்ட அண்ணாமலை!



வடக்கிழக்கு பருவ மழை காரணமாக தமிழ்நாடு முழுக்கப் பரவலாக மழை பெய்துவருகிறது. சென்னை உட்பட பல்வேறு இடங்களில் குடியிருப்பு பகுதிகளுக்குள் மழை நீர் புகுந்துள்ளதால், மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். பல்வேறு கட்சி தலைவர்களும் மக்களை நேரில் சந்தித்து நிவாரண பொருட்களை வழங்கி உதவி வருகின்றனர். அதேபோல் தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை கொளத்தூர் தொகுதி ஜவஹர் நகரில் படகில் சென்று மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

விளம்பர தொடர்புக்கு
9597887847

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
Aagaramuthalaa
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GoLAAH TRAVELS
முன்பதிவிற்கு 9490547783 8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
Aagaramuthalaa | தொடர்புக்கு 9597887847 / 8870884969

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் பரவலாக பலத்த மழை

# தொடர்மழை:மயிலாடுதுறையில் 20,000 ஏக்கர் நெற்பயிர்கள் சேதம்




மயிலாடுதுறை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இம்மாவட்டத்தில் இயல்பான மழையைவிட தற்போது 51 சதவீதம் மழை கூடுதலாக பெய்துள்ளது. ஏரிகளை பொறுத்தவரை இரண்டு ஏரிகள் உள்ளது. பெருத்தோட்டம் மற்றும் திருவாளி ஆகிய இரண்டு ஏரிகளுமே முழு கொள்ளளவை எட்டி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. கிராமபுறங்களில் 2012 குளங்கள் உள்ளன. அதில் 905 குளங்களில் 25 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை தண்ணீர் நிரம்பி உள்ளது. 300 க்கும் மேற்பட்ட குளங்கள் 75 சதவீதம் தண்ணீர் நிரம்பி உள்ளது. அதிகமான மழை பெய்வதால் கூடிய விரைவில் அனைத்து குளங்களும் நிரம்புவதற்கு வாய்ப்பு உள்ளது. நவம்பர் 10, 11 ஆகிய நாட்களில் மிக கன மழை பெய்யகூடிய வாய்ப்பு உள்ளது. எனவே மக்கள் ஒரு வாரத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல தயார் நிலையில் இருக்கவும். மக்கள் அச்சப்பட தேவையில்லை. அதேநேரத்தில் பாதுகாப்பாக இருக்கவும். மேலும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆதார் அட்டை, பான் கார்டு, வங்கி கணக்கு புத்தகம், ஏடிஎம் அட்டை, பத்திர பதிவு தாள்கள் மற்றும் அனைத்து சான்றிதழ்களும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

மாவட்டத்தை பொறுத்தவரை கடல் முகத்துவாரங்கள் 10 எண்ணிக்கைகள் உள்ளன. இவை அனைத்தும் தூர்வாரப்பட்டு, தண்ணீர் விரைவாக செல்லவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 202 கிராமங்கள் ஏதாவது ஒரு வகையில் மழையினால் பாதிக்கப்பட்டவைகளாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அனைத்து பகுதிகளிலும் மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தி உள்ளளோம். கிராம நிர்வாக அலுவலர்களை அவர்களுக்குரிய கிராமங்களில் தங்குவதற்கு உத்தரவிட்டுள்ளோம். ஒவ்வொரு வட்டத்திற்கும் துணை ஆட்சியரை கண்காணிப்பு அலுவலராக நியமித்துள்ளோம். ஒவ்வொரு பிர்காவிற்கும் 3 குழுக்கள் வீதம் 15 குழுக்கள் அமைத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் இம்மாவட்டத்தில் 4 பல்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மையங்கள், புயல் 11 பாதுகாப்பு மையங்கள், 350 பள்ளிகளை பாதுகாப்பு மையங்களாக தேர்வு செய்து, தயார் நிலையில் உள்ளது. அனைத்து இடங்களிலும் அடிப்படை வசதிகள் உள்ளதா என்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரிசியை பொறுத்தவரை 450 டன் தயார் நிலையில் உள்ளது. மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் எனவும், கடலுக்கு சென்ற மீனவர்கள் 9.11.2021 க்குள் கரைக்கு திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரைக்கும் பெய்த மழையினால் 8 மாடுகள் உட்பட 24 கால்நடைகள் இறப்பும், வீடுகளை பொறுத்தவரை பகுதிகளாகவும், முழுமையாகவும் 56 வீடுகள் சேதமடைந்ததாக பதிவாகி உள்ளது. இதற்குரிய நிவாரண பணிகள் நடைபெற்று வருகிறது. சம்பா, தாளடியில் இதுவரை 67 ஆயிரம் ஹெக்டேர் நடவு பணிகள் நடைபெற்றுள்ளது. தற்போது பருவமழை காரணமாக 300 ஹெக்டேர் பயிரில் மழைநீர் சூழ்ந்துள்ளது. மழைநீரை வடிய வைப்பதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. மின்சாரவாரியத்தை பொறுத்தவரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த ஒரு வருட காலமாக 750 மின்கம்பங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 450 இடங்களில் தாழ்வான மின்கம்பிகள் சரி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்டத்தில் 3700 பேரிடர்கால முதல்நிலை காப்பாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். சுகாதாரத்துறை சார்பில் 11 மருத்துவ குழுக்கள் தயார் நிலையில் உள்ளனர். கால்நடை பராமரிப்பு துறை சார்பில் 10 குழுக்கள் அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளனர். மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அவசர கால கட்டுப்பாட்டு அறை சுழற்சி முறையில் அலுவலர்களை கொண்டு 2 மணி நேரமும் இயங்கி வருகிறது. பொதுமக்கள் இயற்கை இடர்பாடுகள் குறித்தான புகார்களை இலவச தொலைபேசி எண்04364 1077,04364 222588 என்ற எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம். புகாரின்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 164 ஜேசிபி இயந்திரங்கள் மழைநீரை வெளியேற்ற 80 பம்புசெட்கள், 175 ஜெனரேட்டர், 140 மரம் அறுக்கும் கருவிகள் தயார் நிலையில் உள்ளன. கரை உடைப்பை சரி செய்ய 1 லட்சம் சாக்குகளும், 35 ஆயிரம் மணல் மூட்டைகளும், 400 யூனிட் மணல் தயார் நிலையில் உள்ளது. எனவே மக்கள் அச்சப்படாமல் பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்துள்ளார்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் வயல்களில் மழைநீரை வடியவிடும் பணி தீவிரம்

## விவசாயிகளே களத்தில் இறங்கினர்





மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த 10 தினங்களாக வடகிழக்குப் பருவமழையானது விட்டுவிட்டு பெய்துவருகிறது. சராசரியாக 30 மி.மீ மழை பெய்துவருகிறது. கடந்த 3 தினங்களாக மழை தொடர்வதால் சம்பா மற்றும் தாளடியில் நடப்பட்ட இளம்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது. ஏற்கனவே பயிர்களைசூழ்ந்த மழைநீர் வடிந்து வந்தநிலையில் தற்பொழுது மேலும் மழை அதிகரித்துவருவதால் இதுவரை 2 ஆயிரம் எக்கரில் பயிர்கள் மூழ்கியுள்ளது. மழை நின்ற பிறகுதான் தண்ணீர் வடிய வாய்ப்புள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 1.70 லட்சம் ஏக்கரில் சம்பா மற்றும் தாளடி விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் முழுவதும் நட்டு முடிக்கப்படும் என்று விவசாய துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மயிலாடுதுறை மாவட்டத்தில் பல்வேறு ஊராட்சிகளில் வீட்டுமனைகளில் வீடுகள் கட்டப்படாத பள்ளப்பகுதிகள் அதிக அளவில் மழைநீர் தேங்கியுள்ளது. அவற்றை பொக்லைன் மூலம் வெளியேற்றும் பணி ஆங்காங்கே நடைபெற்று வருகிறது பட்டமங்கல ஊராட்சியில் பல நூறுகணக்கான வீடுகளும் வீட்டுமனைகளும் உள்ளன. வீடு கட்டப்படாமல் உள்ள மனைகளில் மழைநீர் வெள்ளம்போல் தேங்கி மற்றவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்யதியுள்ளது. மயிலாடுதுறை பட்டமங்கல ஊராட்சியில் ஊராட்சிமன்ற அலுவலகம் உள்ள திருமுருகன் நகர் பகுதியில் காலிமனைகளில் மழைநீர் தேங்கி ஏரிபோல் காட்சியளித்து. அதனை வெளியேற்றும் பணி மும்முரமாக நடக்கிறது. கொள்ளிடம்: கொள்ளிடம் அருகே உள்ள ஆச்சாள்புரம், ஆரப்பள்ளம், அளக்குடி, மகேந்திரப்பள்ளி, காட்டூர், மகாராஜபுரம் , வேட்டங்குடி, குன்னம், மாதானம், பழையபாளையம், கண்ணபிராண்டி ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக 5000 ஏக்கர் சம்பா நடவு மற்றும் நேரடி விதைப்பு பயிர் தண்ணீரில் மூழ்கி உள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் மேலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் சம்பா நெற்பயிர் தண்ணீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. அதே சமயத்தில் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு மேல் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கி இருந்தால், அழுகும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. கொள்ளிடம் அருகே உள்ள கண்ணபிரண்டி கிராமத்தில் வடிகால் வாய்க்கால் தூர்வாரப் படாததால் அப்பகுதியில் நேரடி விதைப்பு செய்த 500 ஏக்கர் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள வடிகால் வாய்க்கால் தூர்வாராததால் தண்ணீர் எளிதில் வெளியேற முடியாமல் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கி உள்ளது. இதனால் தற்காலிகமாக கிராம விவசாயிகள் ஒன்று சேர்ந்து நேற்று கண்ணபிரானண்டி வடிகால் வாய்க்காலை சொந்த முயற்சியால் தூர்வாரினர்.

# தொடர் மழையால் மயிலாடுதுறையில் 500 ஏக்கர் சம்பா பயிர்கள் கடும் சேதம்.





தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்திலும் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வயல்களில் தண்ணீர் அதிக அளவு சூழ்ந்துள்ளது. இந்த சூழலில் குத்தாலம் தாலுக்காவிற்கு உட்பட்ட கொழையூர் கிராமத்தில் பல்லவன் வாய்க்கால், அண்ணாமலை வாய்க்கால்கள் இப்பகுதியின் பாசன வாய்க்கால் ஆகவும், வடிகால் வாய்க்கால் ஆகவும் இருந்து வருகிறது. இந்த சூழலில் காவிரி கடைமடை மாவட்டமான மயிலாடுதுறையில் புதிதாக பொறுப்பேற்ற தமிழ்நாடு அரசு மேட்டூர் அணை திறப்பதற்கு குறுகிய காலம் மட்டுமே இருந்த நிலையில் வாய்க்கால்களை தூர்வார போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்தது.

இருந்த போதும், பிரதான வாய்க்கால்கள் ஆன ஏ, பி வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டன. ஆனால் சி, டி என்று சொல்லக்கூடிய கிளை வாய்க்கால்கள் பெரும்பாலான இடங்களில் சரிவர தூர்வாரப்படவில்லை. இதன்காரணமாக கொழையூர், பூவாலை, செங்குடி ஆகிய கிராமங்களில் கனமழையால் வயல் வெளிகளில் சூழ்ந்த வெள்ளநீர் வடிவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மழைநீர் பல்லவன் வாய்க்கால் மற்றும் அண்ணாமலை வாய்க்கால் ஆகியவற்றின் வழியே வடிந்து வீரசோழன் ஆற்றில் சென்று கலக்கும். வாய்க்கால்களை தூர்வார காரணத்தால் வெள்ள நீர் வடியாமல் சுமார் 500 ஏக்கரில் சம்பா இளம்நாற்றுகள் முற்றிலும் நீரில் மூழ்கி அழுகி விட்டன. இதனால் ஏக்கர் ஒன்றுக்கு 30ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்த விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

### மயிலாடுதுறையில் தொடர் மழை

# காவல்நிலைய மதில் சுவர் சாலையோரம் இடிந்து விழுந்தது




தொடர் மழை காரணமாக மயிலாடுதுறையில் பயன்பாடு இல்லாமல் சிதிலம் அடைந்துள்ள நிலையில் உள்ள பழைய காவல் நிலைய 10 அடி கட்டிட சுவர் விழுந்தது. மயிலாடுதுறை நகரில் கூறைநாடு பகுதியில் மயிலாடுதுறை காவல் நிலையம் அமைந்துள்ளது. முன்னர் ஓட்டு கட்டிடத்தில் இயங்கி வந்த மயிலாடுதுறை காவல் நிலையம் சிதிலமடைந்ததால் கடந்த 200 ஆம் ஆண்டு அதன் அருகிலேயே புதிய காவல் நிலையம் கட்டப்பட்டது. அதனுடன் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், மயிலாடுதுறை காவல் நிலையம், அனைத்து மகளிர் காவல் நிலையம் இவை அனைத்தும் ஒரே இடத்தில் கட்டியுள்ளனர். இந்நிலையில் தற்போது தமிழ்நாட்டில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழை காரணமாக பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. இந்த சூழலில் மயிலாடுதுறை இயங்கி வந்த தற்போது பயன்பாடற்ற காவல் நிலையத்தின் பழைய ஓட்டு கட்டிடம் சிதிலமடைந்து இருந்து வருகிறது. இக்கட்டிடத்தில் மரம், செடிகள் என புதர் மண்டி காட்சி அளிக்கிறது. மேலும் அவ்வப்போது கட்டிடத்தின் ஒரு சில பகுதிகள் இடிந்து வந்தது. கட்டிடம் மக்கள் நடமாட்டம் உள்ள முக்கிய சாலையில் அமைந்துள்ளதால் பொதுமக்கள் மீது இடிந்து விழுந்தது உயிரிழப்பை ஏற்படுத்தும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதை அடுத்து பழைய காவல் நிலைய கட்டிடத்தை அங்கிருந்து இடித்துவிட்டு பயனுள்ள அந்த இடத்தில் அரசுக்கு பயனுள்ள வேறு கட்டிங்கள் கட்ட வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் மற்றும் காவலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் இன்று காலை பெய்த கனமழையில் சேதம் அடைந்த பழைய காவல் நிலைய கட்டிடத்தின் 10 அடி உயரமுள்ள சுவர் இடிந்து சாலையில் நடுவே விழுந்தது. இதில் நல் வாய்ப்பாக எந்தவிதச் பாதிப்பும், உயிரிழப்பும் ஏற்படவில்லை. மேலும் சாலையில் குறுக்கே சுவர் விழுந்ததால் நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறும் முன்பு உடனடியாக சிதிலமடைந்து வரும் பழைய காவல் நிலைய கட்டிடத்தை முழுமையாக இடித்துவிட்டு காவல்துறைக்கே பயனுள்ள கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று காவலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### செம்பனார்கோவில் அருகே பெருமாள்கோவில்

# அறங்காவலர் கொலை வழக்கில் ஒருவர் கைது



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் அருகே தலைச்சங்காடு கிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான நாண்மதியப்பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோவிலில் திருநாங்கூர் வெள்ளாளர் தெருவை சேர்ந்த திருவேங்கடம்(வயது 28) என்பவர் கடந்த 20 ஆண்டுகளாக அறங்காவலராக இருந்து வந்தார். இவர் கடந்த 7 ந் தேதி கோவிலுக்கு சென்றார். அப்போது அங்கு நடை திறப்பதற்கு முன்பாக கோவில் அருகே 3 பேர் பஜனை பாடி கொண்டிருந்தனர். அவர்களிடம் கோவில் நடைதிறக்காமல் பஜனை பாடக்கூடாது என்று அறங்காவலர் திருவேங்கடம் கூறி யுள்ளார். இதன் காரணமாக அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் பின்னர் திருவேங்கடத்தை காணவில்லை. உறவினர்கள் பல்வேறு இடங்களில் அவரை தேடி வந்தனர். இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை கோவில் குளத்தில் திருவேங்கடம் மர்மமான முறையில் பிணமாக மிதந்தார். இதைப்பார்த்த அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் செம்பனார்கோவில் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் செம்பனார்கோவில் இன்ஸ்பெக்டர் செல்வி சப்—இன்ஸ்பெக்டர் பாலசுந்தர் மற்றும் போலீசார் அங்கு சென்று திருவேங்கடத்தின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு மயிலாடுதுறை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக போலீசார் சந்தேக மரணமாக வழக்குப்பதிவு செய்து 3 பேரிடம் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் அறங்காவலர் கோவில் நடை திறக்காமல் பஜனை பாட அனுமதி அளிக்காததால் தகராறில் ஈடுபட்டு பிறகு குளத்தில் மூழ்கடித்து திருவேங்கடத்தை தான் கொலை செய்ததாக கோவில் அருகே வசிக்கும் திருவள்ளூர் மாவட்டம் ஆரணியை சேர்ந்த முகுந்தன் (24)என்பவர் போலீசாரிடம் ஒப்புக் கொண்டார். அதனை தொடர்ந்து கொலை வழக்காக மாற்றி முகுந்தனை செம்பனார்கோவில் போலீசார் கைது செய்தனர். கோவில் அறங்காவலர் குளத்தில் மூழ்கடித்து கொலை செய்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சீர்காழி: சூறைக்காற்றுடன் பலத்த மழை : பழையாறு துறைமுகத்தில் விசைப்படகு உடைந்து நொறுங்கியது



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே பழையாறு மீன்பிடி துறைமுகம் உள்ளது. இந்த துறைமுகத்தில் இருந்து தினமும் 300 விசைப்படகுகள், 300 பைபர் படகுகள், 250 நாட்டுப்படகுகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்று வருகிறார்கள். அனைத்து விசைப்படகுகளும் பழையாறு துறைமுகத்தில் படகு அணையும் தளத்தில் நிறுத்தி வைக்கப்படுவது வழக்கம். கடந்த ஆண்டு படகு அணையும் தளம் மணல் மேடாகி விட்டது. இதன் காரணமாக அங்கு ஒரு சில படகுகளை மட்டுமே மீனவர்கள் நிறுத்தி வைத்து வருகின்றனர். மற்ற படகுகளை சற்று தூரத்தில் நிறுத்தி வைத்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அப்பகுதியில் சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்தது. துறைமுக பகுதியில் அலையின் தாக்கமும் இருந்தது. இதன் காரணமாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. இதில் பழையாறு சுனாமி நகரை சேர்ந்த ராஜேந்திரன் ( வயது 60) ) என்பவருக்கு சொந்தமான விசைப்படகு உடைந்து நொறுங்கியது. மேலும் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 விசைப்படகுகள் சேதம் அடைந்தன. இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் நேற்று காலை உடைந்த படகை மற்ற படகுகளின் உதவியுடன் கயிறு கட்டி இழுத்து கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். படகு சேதம் அடைந்து இருப்பதால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக ராஜேந்திரன் வேதனையுடன் கூறினார். இதுகுறித்து அப்பகுதி விசைப்படகு உரிமையாளர்கள் மற்றும் மீனவர்கள் கூறுகையில் பழையாறு படகு அணையும் தளம் தற்போது மணல் மேடாகி உள்ளதால் விசைப்படகுகளை நிறுத்த முடியவில்லை. துறைமுகத்தில் இருந்து சற்று தொலைவில் படகுகள் நிறுத்தப்பட்டுள்ளன. படகுகளை நங்கூரம் பாய்ச்சி நிறுத்த வேண்டிய சூழலும் உள்ளது. காற்று வீசும்போது படகுகள் ஒன்றோடொன்று மோதி சேதம் அடைகின்றன. எனவே படகு அணையும் தளத்தை மேம்படுத்த வேண்டும்' என்றனர். இந்த நிலையில் பழையாறு துறைமுகத்தில் பன்னீர்செல்வம் எம்எல்ஏ. ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ், மீன்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சண்முகம், மீன்பிடி ஆய்வாளர் அய்யப்பன் ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர். அப்போது பழையாறு படகு உரிமையாளர்கள் சங்க தலைவர் மதுரைவீரன் மற்றும் கிராம தலைவர்கள், விசைப்படகு உரிமையாளர்கள் உடன் இருந்தனர். பழையாறு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டது.

### வேதாரண்யத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த படகில் பதுக்கி வைத்திருந்த

# ரூ.50லட்சம் கஞ்சா பறிமுதல்



வேதாரண்யத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த படகில் பதுக்கி வைத்திருந்த ரூ.50 லட்சம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் இதுதொடர்பாக வாலிபரை கைது செய்தனர். நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் கடற்கரையில் இலங்கைக்கு கடல் வழியாக கடத்தி செல்வதற்காக படகில் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று கடற்கரை பகுதியில் சோதனை செய்தனர். அப்போது புஷ்பவனம் மீனவர்காலனியை சேர்ந்த மணிகண்டன் (வயது33) என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் 3 சாக்கு மூட்டைகள் கிடந்தது. அதை பிரித்து பார்த்த போது 92 கிலோ கஞ்சா இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து மணிகண்டனை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் இலங்கைக்கு கடத்தி செல்வதற்காக பைபர் படகில் கஞ்சாவை பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது. இதுகுறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசார் வழக்குப்பதிவு செய்து மணிகண்டனை கைது செய்து விசாரணை நடத்தினர். மேலும் அவரிடம் இருந்து ரூ.50 லட்சம் மதிப்பிலான 92 கிலோ கஞ்சாவையும், படகையும் பறிமுதல் செய்தனர். இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.50 லட்சம் மதிப்பிலான கஞ்சா பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் வேதாரண்யம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




